முத்தி நெறி

இராமகிருஷ்ணானந்த ஸ்வாமிகள்
ஆங்கிலத்திலருளிய
சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு

சு. அ. இராமசாமிப் புலவர்,
கருப்பக்களர். (அஞ்சல்)
கோட்டூர் வழி, தஞ்சை மாவட்டம்.

மயிலாப்பூர்
ஸ்ரீராமகிருஷ்ண மடத்தாரால்
பிரசுரிக்கப்பட்டது

1927

(*Copyright Reserved*)

மதராஸ் லா ஜர்னல் பிரஸ், மயிலாப்பூர்.

முகவுரை

மேனாட்டுக் கல்வியாலும் நாகரிகத்தாலும் இந்து மதம் சீர் கேடடைந்து சிதைவுற நேர்ந்த காலத்து அதனைக் காத்து நிலைத்திருக்கும்படி செய்த வள்ளலாம் ஸ்ரீராமகிருஷ்ணர் வங்கநாட்டில் அவதரித்தாரெனினும் இந்நாள் அவரைப் புவிமுழுதும் போற்றித் துதிக்கின்றனர் மாந்தர். தவமிகுதியால் தாம் அனுபவவாயிலாகக் கண்ட அரிய உண்மைகளையும், மனிதவர்க்கத்தின் நன்மைக்காகத் தாம் கொண்டுவந்த செய்தியையும் உலகமுழுதும் பரவச்செய்யத் தக்க தருண வந்ததாக அவருக்குத் தோன்றிய காலத்து, விரிந்த மலரைக்கண்டு ஆங்கு விரைந்தோடும் வண்டினம்போல் அண்டையிலுள்ள பக்தர் குழுவினர் அவரிடம் அணுகி ஆனந்தித்தனர். பலர் சிஷ்யர்களாகிச் சிசுருஷை செய்தனர். சேய்மையிலுள்ளோரும் அவரது உபதேசங்களைக் கேட்டுப் பயன்படும்படி செய்ய இச்சிஷ்யர்களிற் சிலர் தமது வாழ்நாளை அர்ப்பணம் செய்தனர். அவர்களில் ஒருவராவர் "முந்தி நெறி" என்ற இச்சிறு நூலை ஆங்கிலத்தில் இயற்றியருளிய பெரியார். **ஸ்ரீமத் இராமகிருஷ்ணநந்த ஸ்வாமிகள்** என்பது அவர் திருநாமம். இவர் சுமார் 14 வருடம் சென்னையில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் போதனைகளைப் பரவச்செய்யும் தொண்டில் அமர்ந்திருந்தனர். இவர் ஆங்கில பாஷையில் மிக விற்பன்னரா யிருந்தமையின் மதவுண்மைகளை மேனாட்டினர்க்கும் விளங்கும்படி அவர்களது பௌதிக தத்துவ சாஸ்திரங்களுக்கு ஒவ்வும்படி எடுத்துக்கூறும் திறனுடன் விளங்கினர். உள்ளது ஒன்றேயாயினும் அதனைக் கால தேசங்களுக்கியைந்தவாறு விளக்கிக் காட்டுதல் அவதார புருஷர்களுடைய

வும் மகான்களுடையவும் கடமையாக இருந்து வந்துள்ளது. ஆதலின் ஸ்ரீமத் இராமகிருஷ்ணாநந்த ஸ்வாமிகள் வேத புராண இதிகாஸங்களிலுள்ள உண்மைகளை இக்காலத்திற்குத் தக்கவாறு விளக்கிக் கூறியுள்ளார்.

"உரியசிற் சுகமாய் நித்தமா யொருவீ டுளதெனக் கேட்டு
மற்றதனிற்
பிரியமற் றினமு முனமுறும் பொல்லாப் பிறவியே பெற
விரும்பும்"

மக்கள்மீது கருணை புரிந்து முத்தி நெறியை வெகு சுலபமாகக் காட்டும் வண்ணம் இப்பெரியார் ஆங்கிலத்தில் இயற்றிய Path to Perfection என்னும் நூலை நமது தமிழ்நாட்டுச் சகோதரர்கள் அறிந்து உய்யுமாறு தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டுள்ளோம். தமிழகத்தார் அனைவரும் இச்சிறு நூலை வாசித்து முத்தி நெறியை யுணர்ந்து அதன்வழி நிற்பாராயின், அதுவே எமக்கு மட்டிலா ஆனந்தத்தை அளிப்பதாகும்.

மயிலாப்பூர்.
10—10—1927

ஸ்வாமி யதீசுவரானந்தா

சு. அ. இராமசாமிப்புலவர்,
கருப்பக்கிளர். (அஞ்சல்)
கோட்டூர் வழி, தஞ்சை மாவட்டம்.

முத்தி நெறி

இராமகிருஷ்ணானந்த சுவாமிகள்

ஆங்கிலத்திலருளிய

சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு

நமது ஓயா முயற்சி யொவ்வொன்றும் ஒவ்வொரு
குறையினின்றும் எழுவது. இவ்வா றெழும் முயற்சி
களின் தொகுதியையே வாழ்க்கை யென்கின்றோம். முயற்சி
களின் தொகுதி சீவியமாதற்கு அவை அறிவறிந்து எழுந்
தவை யாதல் வேண்டும். ஓயாது சுழன்றோடுகின்ற ஒரு
பொறியின் முயற்சியைச் சீவியமாகக் கருதுவதில்லை. அறி
வறிய ஆற்றும் முயற்சிகளின் தொகுதியே வாழ்வெனப்
படும். இனி சீவிய முயற்சி யொவ்வொன்றும் ஒவ்வொரு
அவாவினின் றெழுவதாயிருக்கும். என்னை யிம் முயற்சிக்
கண் புகுத்தியது எது? ஏதாவதொன்றை யடையவேண்டு
மென்ற அவா. நீங்களும் ஏதாவது தெரிந்துகொள்ளலா
மென்றோ, வேறு ஏதானும் உதவி பெறலாம் என்றோ
இங்கே வந்திருக்கிறீர்கள். ஏதாவதொன்றை யடைவோம்
அல்லது ஏதாவதொன்றை யனுபவிப்போம் என்ற எதிர்
நோக்கில்லாமல் எதையுஞ் செய்ய நாம் முற்படுவதேயில்லை.
இப்பரிசே யெழுகின்ற முயற்சிகள் உள்ளக் குறைவை
யும், அவ்வுள்ளக் குறைவு அமைதியின்மையையும் காட்டு
கின்றன. அவ்வமைதியின்மை நம்மிடம் அமைந்து

கிடக்குங்காறும் நம் முயற்சி ஓயாது; நமது உள்ளக் குறைவை நிறைவிக்க முயன்று கொண்டே யிருப்பீர்கள்.

ஆனால் மனிதனுக்கு உண்மையில் ஏதாவது குறை யுண்டா? இல்லை யென்றே கண்ணபிரானைப்போன்ற பெருந் தெய்வமக்களும், இயேசு நாதரையும் புத்த தேவரையும் போன்ற அவதார மக்களும் கற்பித்துள்ளார்கள். மனிதன் வியத்தகு விசித்திரமானவன் என்பதே அன்னார் அருள் மொழி. பிறவான், இறவான், குறைவில்லான், பேரின்ப முள்ளான், சுயம்பு, சுயஞ்சோதி என்றின்ன வண்ணம் மனிதனைக் குறித்துப் பெரியார் பேசியுள்ளார்கள். அழித்தற்கடவுளது முத்தலைப் படையும் அவனை அழிக்க வல்ல ஆற்றல் படைத்ததன்று. அவன் இயல்பாகவே என்று முள்ளான்; என்று மழிவில்லான். இன்ன பண் பினன் மனிதன் என்றால், நான் யார்? நானும் மனித னென்றே திரிகின்றேன்! ஆனாலோ மூன்றரை முழவுயரந்தா னிருக்கிறேன், பிறந்தேன், செத்தும் போவேன், பல குறை களுமுடையேன். குறையில்லான் இவன் என்று தோட்டி தொட்டுத் தொண்டைமான் வரையிலும் ஒருவனையேனுஞ் சுட்ட மாட்டுவீரா? உண்மையில் மனிதன் குறைகள் மலிந்த சீவனே. அன்னைவயிற்றி னீங்கிய அஞ்ஞான்றே குழந்தை கதறுகிறது. ஏதோ ஒன்று வேண்டியே யன்றோ? மனிதன் பிறப்பதுங் குறையிலே, இருப்பதுங் குறையிலே, இறப்பதுங் குறையிலேதான். குறைபற்றித் தோன்றிக் குறைபற்றி வாழ்ந்து குறைபற்றியே சாகின்றான்.

அற்றேல் இந்த மனிதனுக்கும் அந்த மற்ற மனித னுக்கும் உள்ள உறவுதானென்ன? ஒருவன் ஏனையவனுக்கு எங்ஙனம் ஈடாதல் கூடும்? ஒருவன் மற்றவனோடே ஒருப் படுதல் எப்படி முடியும்? எல்லாக் குறைகளையும், எல்லா

அச்சங்களையும், தோன்ற லழிவு எல்லாவற்றையுங் கடந்தவன் ஒருவன்: மற்றவனோ நானாவகைப்படும் அச்ச அவாக்கள் நிறைந்தவனாயும், பிறந்து இனி இறந்துபட வேண்டியவனாயுமாகிறான். இவ்வகையான் முற்றும் மாறுபட்டு நிற்கும் இருவருக்கும் எவ்வகை யுறவுதானிருக்கக் கூடும்? என்றாலும் ஓர் உறவு உண்டு. வரம்புபட்டுத் தோன்றிச் சாகிற இந்த மனிதனே வரம்பிகந்த தன தியற்கையைக் குறிக்கொண்டு நிற்கிறான். மனிதன் ஒருபோதும் அமைதியற்றவனாய் எப்பொழுதும் இடம்விட்டு இடம் பெயர்ந்து உழல்கின்றான். ஏனென்றால், என்று முலவாத உள்ள நிறைவை அவனுக்கு எப்பொருளுந் தர மாட்டுவதில்லையாகலான், அவன் ஒருபோதும் நிறைவெய்துகிறா னில்லை. வரம்புட் சுருங்கிய இந்த நிலையிலே மன நிறைவு ஏற்படாமல் மனிதன் அலைகின்ற உண்மையொன்றே அஃது அவன் றன் இயற்கை நிலையன்று என்று காட்டுகின்றது. மனிதன் அளவற்ற அவாவுடையவனாகி மேலும் மேலும் வேண்டுகின்ற ஆவல் தணியப்பெறாதவனாகிறான் என்ற வுண்மை அவன் தனது அமைப்பிலேயே வரம்பு கடந்தவனென்பதையும் வரம்புட் கிடக்கும் எதனாலும் உள்ள நிறை வெய்தமாட்டா னென்பதையும் தெளிவுபடுத்துகின்றது.

எந்த மனிதனும் வரம்புட் சுருங்கிய தனது நிலையினாலே உள்ளக் குறை கொண்டு நிற்கக் காணலாம். உங்களில் எவரும் உள்ளநிறை வுடையவரில்லை. திங்கள் தோறும் நூறு ரூபாய் தேடுகிற ஒருவர் அம்மட்டோடு தம் மனமுவந்து அமைதி யடைந்து விட்டதாகச் சொல்லிக் கொள்ளலாம்: அதுதான் சோம்பல்! மடிவேறு, மனவமைதி வேறு. உண்மை யமைதி யின்னதென்று நசிகேதர் நமக்குக்

காட்டியுள்ளார். செல்வமும் ஒரு தனியரசும் அழகிய மாதரும் தருவதாய் இயமன் கூறினன். ஆனால், நசிகேதரோ, மெய்ப்பொருளொன்றே தன்னுள்ளத்தை நிறைவிக்கும் என்றும், வேறொன்றும் வேண்டற்பாற்றன்று என்றும் நன்குயறிந்திருந்தார். ஆனால் நூறு காசு வாங்குகிற உமக்கு இருநூறு கொடுத்தால் மறுத்து விடுவீரா? ஆகவே உள்ளது போதுமென்ற உள்ள அமைதி உண்மையில் உமக்கு ஏற்பட்டு விடவில்லை யென்பது தெளிவாகிறது. உம்மை உள்ளபடி ஆராய்வீராயின் உமது அவாவுக்கு அறுதியேயில்லை யென்று கண்டுகொள்வீர். "யாவற்றிற்குந் தலைவன் யான், அண்டரண்டம் யாவும் எனக்குரியவை, எனக்கு ஒரு குறையுங் கிடையாது, சாவையுங் கடந்து விட்டேன், நான் எவருக்கும் உத்தரவாதியன்று" என்றிவ்வாறு இருமாந்திருக்க வல்ல அஞ்ஞான்றே நுமது கழி பேரவா முடிவுபெறும். இவ்வேளை வருமளவும் நுமது கழி பேரவா நும்மைவிட்டு ஒருபோதும் அகலுத லில்லை. வரம்புகளைவிட்டு நீங்க அவாவுகிறீர்: "வரம்பில்லேம், வீதவில்லேம், வாழ்வேம் எஞ்ஞான்றும்!" என்று சொல்லிக் கொள்ளக்கூடிய நிலை வருமளவும் அமைதிபெறமாட்டீர்கள்.

இந்த நிலையைத்தான் முத்தி அல்லது வீடுபேறு என்பது. ஆகவே இந்தச் சிறு மனிதன் எல்லையெல்லா மிகந்த அந்தப் பெரிய மனிதனுக்கு முற்றும் மாறுபட்டு நிற்பதாகத் தோன்றினும், இந்தச் சிறு சீவன் அவ் அனந்த சீவனோடு ஒன்றியபோதல்லால் அமைவுறான்: அதுதான் அவனது இயல்பான அமைப்பு என்று இஃது காட்டுகின்றது. இந்திய வேந்தர் வேந்தனை யாண்ட ஷாஜஹான் மன்னன் கொலுவீற்றிருந்த மயிலணைமீதே மீனொன்றை விடுத்து அதற்குத் தலைவணங்கிக் கும்பிடுவீராயினும் அம்மீன்

உவகை யடையுமோ? தண்ணீரே தன தியல்புக் குகந்த நிலையமாதலால், "என்னைச் சாக்கடைக் குழியிலாவது எறிந்துவிடும், நீரினின்றும் நீக்கி வையாதீர்!" என்றல்லவோ முறையிடும்? இந்த மாதிரியாகவே இழந்து விட்ட நும தியற்கையை நாடி அமைதி யற்றுத் தவிக்கிறீர்கள்.

அமைதியின்மை யில்லாதவரே யில்லை. ஆனால் இழந்துவிட்ட தன தியற்கை நிலையை, வரம்பெல்லாங் கடந்த அந்தப் பெரு நிலையை, அவாவி அமைதியற்று அலை கின்றவனே அருளாளி. தனது தற்போதைய சிறு நிலை பற்றி அமைவுற்றுக் கிடக்கின்றவனே மருள் கொண்டு தவிக் கின்றவன். இம் மனமுவந்த மனிசன் மனிதனேயில்லை; விலங்கின் ஒரு சிறிதும் மேம்பட்டவ னன்று. உணவு மட்டும் ஊட்டி வந்தால் ஆனையொன்றை ஆயிசு முழுதுங் கட்டி வைக்கலாம்; வேறு கவலையின்றி அமைந்து நின்று விடும். இப்பரிசே அமைந்து கிடக்கின்ற மக்கள் மாக் களின் மிக்கவரன்று. உண்பதினும் உறங்குவதினும் உயிர்த்தலினும் அச்சுறுவதினும் நாமும் நம்மி னிழிந்த விலங்குகளும் ஒன்றே. இவைகளின் மேற்பட்ட புனிதச் செய்கையொன்று ஆற்றுதற்கு அறியோமாயின் நாம் விலங்குகளினின்றும் விலங்குவதெங்ஙனம்?

மனக்குறைவு தோன்றுமிடத்தி லெல்லாம் மிகுமாட்சி பொதிந்த முளை உண்டென் றுணர்க. எந்தப் பெருமக னது வரலாற்றைப் படித்தாலும் அவர் மேலும் மேலும் ஆராய்ந்து அமைவுறாமல் ஓயா துழைத்த விவரந் தெரிய வரும். மேனோக்கு ஒன்று மின்றி ஓய்ந்து கிடக்கிறவர்கள் தான் கூலியாட்க ளாவதற்கெனத் தலையிலெழுத்து வாங் கினவர்கள். அவர் செக்கைச் சுற்றிச் சுற்றி நாள் முழு துஞ் சுழன்றும் தாம் சென்ற வழியி னீங்க மாட்டாத

எருதுகளைப்போல்வார். இவர் பள்ளி பயின்ற அக்காலத்திலே கற்கக் கவலை கொள்ளாது தமது வகுப்பின் கடைசியிலிருந்து காலங் கழித்தனர். அவரோடேயே வேறு சிலர் ஓய்வு கொள்ளாமல் உழைத்துப் படிப்பில் மேனோக்குக் கொண்டு பாடுபட்டு வந்தனர்; அவர்கள்தான் இன்றைக்குப் பெரிய அதிகாரிகளாகவும் மிக்க கனவான்களாகவும் ஆயிருக்கிறார்கள். எல்லாப் பெருமக்களுடைய வரலாறுகளையும் ஊன்றிப் படித்தால் அவர்களனைவரும் அமைந்து கிடவாமல் ஓயாதுழைத்ததாலேயே பெருமை யடைந்தனர் என்றுணரலாகும். ஆதலால் ஓயாதுழைத்தலை யொரு போதும் நிறுத்தாதீர்கள்.

கொஞ்சத்தோடே என்றும் அமையாதீர்கள். நமது ஆற்றல் அளவற்றது; நமக்கு எந்தக் குறைவுங் கிடையாது; இவ் வரம்பிகந்த நம தியற்கையை யடையுங்காறும் நிற்கப்படாது. நமதறிவு சுருங்கியதென்று கருத வேண்டாம். சாக்கிரட்டீசுக்கிருந்த மூளையும் நியூட்டனுக்கிருந்த நுண்ணறிவும் நம்மிடம் உண்டு. ஆனால் தூசும் மாசும் படிந்து மூடிப்போகும்படி விட்டுவிட்டீர்கள்; அவ்வளவுதான். அந்தத் தூசைத் துடைத்துப் பேரவாவைக் கிளப்பி நம துழைப்பை யெழுப்பிவிடுவீரானால் ஆற்றலனைத்தும் நம்மகத்தே மறைந்து கிடக்கக் காணுவீர். நமக்கு வரம்பென்பது இல்லவே யில்லை. கடவுளுக்கு நமக்கும் இடையே வெளியும் வேலியும் எப்பொழுதும் ஏற்படாமல் என்று மொருதன்மையராய்ப் பண்டிருந்த பெருஞானிகளி லொருவரைப் போன்று நீவிரும் வரம்பெல்லாங் கடந்தவரென்றே யறிக.

ஒருவனைப் பாவியென்று சொல்வதே எதினு மிக்க பாவமென்று நமது மறை நூல்கள் அறைகின்றன. உம்

மைப் பாவியென்றுங் குறையுள்ளவரென்றும் கருது மக்கணமே எல்லையில்லாத உமதமைப்பை மறந்து உடம்போடும் உள்ளத்தோடும் ஒன்றி நின்றீர். உடம்போடும் உள்ளத்தோடும் இவ்வாறு ஒன்றி நிற்பதே உமது இடர்களெல்லாவற்றுக்கும் எழுவாயாவது. உமது எல்லை கடந்த இயற்கையை யடைய விழைவீராயின் எல்லையுட் சுருங்கி நிற்கு மிந்தச் சிறு நிலையைப் பற்றிய பற்றெல்லாம் கடிந்துவிடும். உமதுடம்பையு முள்ளத்தையும் மறந்துவிடும். உமது உடம்பையும் உள்ளத்தையும் உம்மின் வேறு பிரித்தறிந்து கொள்ளும். உண்மையில் இடைவிடாமல் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறீர். "நான் வளர்ந்தவன் அல்லது குள்ளமானவன்; கறுத்தவன் அல்லது சிவத்தவன்; மெலிந்தவன் அல்லது தடித்தவன்" என்றின்னவண்ணமாகவா எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கிறீர்? முகக் கண்ணாடியின் முன்னர் நிற்கும்போதுதான் இவை யெல்லாம் எண்ணுவீர். நோயின்மை யாவதென்ன? தனதுடம்புண்மை பற்றி ஒரு ஞாபகமும் இல்லாதிருக்கும்போதே ஒருவன் ஒருவனை நோயுமற்றவனுவான். தலைவலி யேற்படும்போதுதானே தலையைப் பற்றிய ஞாபகம் வருகிறது; காலில் நோவுண்டான வழிதான் அவ்வுறுப்பின் நினைவு எழுகின்றது. ஆகவே நீர் ஆன்மாவே; ஆவியே. உமதுடம்பு எவ்வளவோ வலுவோடு உம்மீது ஊர்ந்தழுத்திய போழ்தினும் நீர் அதை மறந்துவிடுவதினின்றும் அது தடுக்க மாட்டாது. அழகியதோர் காட்சியிலோ இன்னிசை யொன்றிலோ ஈடுபட்டிருக்கின்றபோது உடம்பை மறந்து விடுகிறீர்; அதாவது அவ்வேளை மட்டிலுமாவது உமதுடம்பைக் கடந்து விட்டீர். இதுதான் உமதுண்மை யமைப்பு; நீர் உவகை யெய்துவதற்கு அதுதான் காரணம். ஆறுதலாயிருக்கும்போதும், ஒய்வுற்றிருக்

கும்போதும், எண்ணத்தி லாழ்ந்து தன்னை யிழந்து நிற்குந் தறுவாயிலும் உடம்பைப் பற்றிய ஞாபகமேயில்லை. இந்த நிலைமை யலைக்கத் திடீரென்று ஏதேனு மேற்பட்டவழியே அதைத் துன்பம் என்கிறீர்.

உவகையிலே நினைவு மாண்டு போகின்றது. சிந்தனையி லாழ்ந்திருக்கும்பொழுதும் உடலுணர்ச்சி யில்லாதபோழ் தும் நீர் எங்கே போயிருக்கிறீர்? உமதுடலினின்றும் உள் ளத்தினின்றும் புறப்பட்டு விட்டீர்; அதுதான் உவகை. உவகையே உமது உண்மை யியல்பு; அதனாற்றான் இன் பத்தையே விரும்புகின்றீர். மனிதன் இன்பத்தை நாடி நாடி எப்போதும் அமைதியற்றவனாய் விடுகிறான்; ஏதோ ஓர் இடர் இடுக்குவதனாலேயே இவ்வாறு தவிக்கிறான். மனிதன் உவகையைத் தேடி ஓயாதுழைத்து வருகிறான். ஊர் விட்டு ஊர் போயும், நாடுதோறுஞ் சென்றும் அவன் உழல்வது இழந்துவிட்ட தனதுள்ள மகிழ்ச்சியை நச்சியே யாகும். கடவுளும் கழிபேருவகையும் ஒன்றாதலால், இப்பேரின்பத் தேட்டமும் கடவுள் நாட்டமும் வேறு வேறல்ல. அவை ஒரே பொருளைத் தருவன. அதனா லேயே "கடவுள் இல்லையென்று தனதுள்ளத்துள்ளே ஓரறி விலி சொல்லிக்கொண்டான்" என்று வழங்கி வருகிறது. இறைவனிடத்திலிருந்தே எல்லா இன்பங்களும் போந்தன வாதலால் இன்பந் தேடுகிற ஒவ்வொருவனும் கடவுளை நாடுகிறவனாகின்றானன்றோ?

இறைவனைப்பற்றி நாம் கூறிப்போந்த இலக்கணம் ஆனந்தம் என்பதாம். சூனியவாதிகளிற்கூட எவரும் இன்பத்தை யவாவாதா ரில்லை; அவ்வின்பமே இறைவன். படைப்பு முழுவதும் ஆனந்தத்தினின்றுந் தோன்றியது; ஆனந்தத்திலே உளதாவது; அவ் வானந்தத்திலேயே

அமிழ்ந்துபோகும். நாமும் அண்டாண்டம் யாவும் கடவுளினின்றுந் தோன்றினேம்; கடவுளின்பாலே வதிகின்றேம்; கடவுளிடத்துக்கே போவோம். எனவே ஆனந்தம் கடவுள் என்பன ஒரு பொருட் கிளவிகள். ஆனந்தத்திலே ஒவ்வொருவரும் ஈடுபடுவதினாலே எவரும் தாம் சூனியவாதியென்று கூறுதல் அமையாது; ஆனந்தமே கடவுளாகலான், உண்மையில் ஒவ்வொருவரும் வேண்டுவது ஆனந்தமே. ஆயின், எவ்வகையானந்தம் நீவிர் வேண்டுவது? தகர்ந்து போகாத் தனியின்பமேயாகும். நீவிர் விழைவது இன்பமே யாதலால் ஏதோ ஒரு சிறிது இன்பந் தருகின்ற இந் நிலையாத சிற்றின்பத்தையுங் கைக்கொண்டீர்; ஆனால் முடிவேயற்ற கழிபேரின்பமே உமக்கு இலக்காகும்.

என்றுந் தகராப் பேரின்பமொன்றே கடவுளென்ற பேராற் போற்றப்படுவது. தகர்ந்தழியும் இன்பம் சிற்றின்பமென்று பேர்படும். அவ்வப்போது சிறுகச் சிறுக இன்பந்தரும் இச்சிற்றின்பத்தோடே நீர் சற்று அமைந்து கிடக்கலாம். ஆனால் தகர்ந்து போகாத, என்றுமுள்ள, எல்லையில்லாத இன்பமே உமது குறியாகும்; அதை யடைந்து அனுபவிக்கவேண்டும். அவசர அவசரமாக அமுது அருந்திவிட்டு அலுவற் கூடத்துக்கு ஓடோடியும் போய் நாள் முழுதும் நலிந்து உழைக்கின்ற ஒருவர் உண்மையில் தேடுவது இன்பமே; இன்பத்தைப் பணந் திரட்டுவதால் அடைந்து விடலாமென்று நம்பிப் பாடுபடுகின்றார். ஓர் மூலையிலிருந்து தமதுள்ளத்தை யொடுக்கிச் சுற்றுமுள்ளவைகளை மறக்கமுயன்று தமக்குள்ளேயே தம்பிரானைத் தரிசிக்கத் தவமுயலும் இன்னொருவரும் அதே காரியந்தான் செய்கிறார்.

இனி இவ்விரண்டு முறைகளையும் ஆராய்வோம். ஒருவர் தமக்குவேண்டிய உண்டியையும், வேறு இன்பப்

பொருள்களையும், பலவகை மகிழ்ச்சிகளையுந் தரவல்ல பணத்தையே உண்மையில் நாடி யுழைக்கின்றார்; தமக்கு வேண்டற்பாலன யாவையும் அதிகாரவாயிலாக அடையலாகும் என்றுன்னி அவ்வதிகாரத்தை நாடிப் பணந்தேடிக் கொள்ள முயலுகிறார். ஆனால் இந்த முறை மிகவும் உறுதியற்றது. அவர் பணத்தைத் திரட்டிக்கொள்ளலாம்: அது கொடுத்த நல்லுணவைச் சீரணிக்க முடியாதிருத்தல்கூடும் அது கொண்டுவந்த இன்பங்களை நுகர இயலாது போகலாம். கல்கத்தாவிலே யிருந்த கோடீசுவர ரொருவரை எனக்குத் தெரியும்; அவருக்குக் கஞ்சி நீர்தான் அருந்த இயலும்: ஆகவே அவர் தமது குற்றேவலாளனது அளவுகூட இன்பம் நுகர்ந்தாரில்லை. இனி, பொருள் எவ்வள விருந்தபோதினும் அதை வைத்து ஒருவர் எத்தனைநாள் தான் வாழ்ந்துவிடமுடியும்? உடம் புள்ளவரையுந் தானே! உயிர் வாழ்வைப்போன்ற அவ்வளவு உறுதியற்ற வேறெதுவும் இவ்வுலகத்திலில்லை யென்றறிவோம். தொட்டிற் குழவிக்கும் இளங்காளைக்கும் பழங் கிழவற்கும் செல்வருக்கும் வறியவருக்கும் எந்தக் கணத்திலும் சாவு வந்து விடலாம். ஆகவே, உடல் வேறு நாம் வேறு என்றெண்ணுமல் அதனேடொன்றியும், அவ்வுடலினதும் உள்ளத்தினதுமாகிய இன்பமே நமதின்பமென மயங்கியுழைத்தும் வருவதால் அவ்வின்பம் எவ்வளவு அழிதன்மாலையது என்பது எளிதில் உணரற்பாற்று.

ஒவ்வொருவரும் ஆறுவகை மாறுதல்களை யடைந்து தீரவேண்டும். கருப்பையிலே சிசுவொன்றிருந்தது; கருப்பையிலே. ஒரு சிசு இருந்தமையாற்றான் சிசுவொன்று வெளிப்பட்டது. அது பிறந்த பின்னர் உருவத்திற் பெருகிப் பலவகைத் திரிபுகளையும் அடைகின்றது—பைய

னாய்க் காளையாய் மனிதனாகவேண்டும். அதற்குப் பின் ஏற்படுவதென்ன? படிப்படியாய்க் குறையவேண்டியதே. கண்கள் தம் வலியிழக்கும்; காதுகள் கேட்கமாட்டா; கையுங்காலுஞ் சோம்பும்; நினைவு தடுமாறும். உயிர்வாழும் ஒவ்வொருவருடைய வாழ்க்கை வரலாறும் இதுவேயாகும். ஒருடம்போடு பிணைக்கப்பட்டுத் தம் முள்ளம் ஐயவடிவே யாகத் தவிக்கும் இத்தகையவரொருவர் என்று முலவாப் பெருவாழ்வை யெங்ஙனம் எதிர்பார்க்க இயலும்?

ஆனாலும் எவரும் சாகவிரும்புகிறதில்லை. சாவை யொப்ப மனிதன் வெறுப்பது வேறே எதுவுமில்லை. ஆனால் நமக்கிருக்கும் வாழ்வு இதுவேயாயின், மனிதன் சாவி னின்றுந் தப்பமுடியாது. எனவே இன்பம் எய்தலாம் என்று நம்பியிருக்க இயலாது. வாழ்வு என்பதன் பொருள் என்ன? வாழ்வாவது இருப்பது, இருக்கப்போவது. சாவா வது இராமை, இராமற்போவது. உண்மையினின்று இன்மை ஒருபோதும் வரமுடியாதென்றும், உண்மை இன்மையாவது எப்போதும் முடியாதென்றும் அறிவோம். இதுபோலவே வாழ்வு சாவாகவாவது சாவு வாழ்வாக வாவது மாறமுடியாது. ஆகையால் ஒருவன் வாழ்கிரு னென்ருல் அவன் சாதலில்லை. ஆனால் சாவாத அந்தப் பெருவாழ்வை அவன் எங்கே காணுதல்கூடும்? அக்காட்சி பெறுதற்கு அவன் தனதுடம்பைக் கடந்து செல்ல வேண்டும்; உடம்பைக் கடப்பதற்குப் பிரபஞ்ச முழுவதை யுங் கடந்துபோகவேண்டும். ஏனென்ருல், இப்பிரபஞ்ச முழு மையும் எளிதிலே முறிந்துபடக்கூடிய உமதுடம்பிலேயே தங்குவதாகும். கண்களின் மீது உருவ உலகனைத்தும், காதுகளின்மீது ஓசை உலகனைத்தும், நாவின்மீது சுவை யுலகனைத்தும் அடங்கி யிருக்கின்றன.

உறக்க நிலை இதை மிக எளிதில் விளக்கும். கண்கள் காணுமட்டும் உமக்கு உருவங்கள் உளவாகும்; மூக்கு முகரு மட்டும் நாற்றங்கள் உளவாகும்; காதுகள் கேட்குமட்டும் ஓசைகள் உளவாகும்; இவ்வகையே ஒவ்வொரு புலன் மாட்டு மாகும். உமது கண்களிலும் காதுகளிலும் ஏனைப் புலனனைத்திலும் நீர் உள்ளவழி, அந்நிலை விழிப்பு நிலை யாகிறது. இனி நீர் உள்ளத்தோடே ஒன்றி நின்றவழி யுளவாகும் சிந்தனை நிலையொன்றுண்டு. புலன்களினின்றும் உள்ளத்தினின்றும் அப்புறப்பட்டு நிற்கும் இன்னொரு நிலை யுண்டு. அந்நிலையே ஆழ்ந்த உறக்க நிலையாகும். அந்நிலை யிலே உமது நண்பன் வந்து உமதண்டையிலே இன்னிசை மிழற்றிக் கொண்டிருக்கலாம்; நீர் உமது காதுகளில் இல்லை யாதலால் அத்தீங்குரலைக் கேட்கிறீரில்லை. உமதுடம்பி லேயே யிருக்கிறீர், அதிலையமில்லை; ஆயினும் உமது காது களிலேனும் ஏனைப்புலன்களிலேனும் நீர் இல்லை. உமதுள் ளத்தினின்றும் புலன்களினின்றும் விலகி யிருக்கிறீரென் றாலும் உமதுடம்பிலேயே வதிகின்றீர்; அதனாற்றான் ஆட்டி னால் எழுந்துவிடுகிறீர். எழுந்துவிடுகிறீர் என்றாலென்ன? உமதுள்ளத்துக்குத் திரும்புகிறீர்; உமது புலன்களுக்குத் திரும்பிவருகிறீர். நீர் தூங்கிக்கொண்டிருந்தபோது உமது அகமுடையாள் அங்குற்று அண்டையிலிருந்தாள். அது கூட உமக்குத் தெரியாதுபோயிற்று. உம்மைச் சுற்றிலு மிருந்த எதையும், பிரபஞ்சமுழுதையுமே, உணர்ந்தீரில்லை. ஆகையாலே பிரபஞ்சத்தின் உண்மை நீர் உமது உள்ளத் திலும் புலன்களிலும் இருப்பதைப் பொறுத்திருக்கிறது என்றாகிறது. நீர் உறங்கியபோது உமக்கு உலகம் இருந் ததா? அதைப்பற்றிய எந்த நினைவும் இல்லை. ஆகையால் இந்தச் சிற்றுடம்பு எளிதில் முறிந்துபோகக் கூடியதாய்த்

தோன்றினும் (நிரம்பவும் எளிதிலே முறிந்துபடக்கூடிய தென்பதில் ஐயமேயில்லை) இப்பிரபஞ்ச முழுவதுந் தாங்குவதற்குரிய முட்டுக்காலாவது அதுவே என்றுகிறது. ஆகவே பிரபஞ்சத்தினின்றும் விலகிப்போவதற்கு உள்ளத்தினின்றும் புலன்களினின்றுமே விலகிப் போகவேண்டுமென்று தெளிவாகிறது. அதைச் செய்து முடித்தபோழ்து உமக்கு உரிமையான என்று மூலவாப் பெருவாழ்வைக் கண்டுகொள்வீர். இம்முறை பற்றித்தான் உமது முன்னோர் என்று மழியாத தமதமைப்பைக் கண்டனுபவித்தனர். வெளிப்புலன்களையும் உட்புலனாகிய உள்ளத்தையுங் கடந்து அப்பாற்பட்டு அவ்வனுபவத்தைக் கையாண்டனர். இதைச்செய்ய மாட்டுவீராயின் என்றென்றும் அழியாத உமது பெருவாழ்வையும் அடைவீர். அதுகாலை அறுதியற்ற தனிப்பேரின்பம் உமக்குரியதாகும். இதுதான் வீடு.

ஒரு நெறி நம்மை நமது குறியினின்றும் விலக்கிச் சேய்மைக் கண்ணும், ஏனையதொன்று குறித்த இலக்கின் கண்ணும் உய்க்கின்றன என்று இதுகாறுங் கூறிப்போந்தவையான் உணரலாகும். பொருள்தேடுவது முதலாக நீங்களனைவரும் போகிறவழி தப்பு நெறியாகும்; ஏனெனில் உங்கள் உடம்பைப் போற்றுகிறீர்கள். நீங்கள் கும்பிடுஞ் சாமி அதுவொன்றே. இந்தச் சாமியை வழிபடுகிறதனாலே உமது பெண்டாட்டியை நேசிக்கிறீர்; இவ்வழிபாட்டாலேயே நல்லுணவுகளை நச்சுகிறீர்; அழகிய காட்சிகளையும் இனிய ஓசைகளையும் இன்ன பலவற்றையும் விரும்புகின்றீர். ஆனால் ஒரு தலைவனைச் சேவித்தற்கு ஏதாவது சம்பளம் எதிர்பார்ப்பதுண்டே: உமதுடம்பாகிய இந்தச் சாமிக்கு உழைத்ததற்கு, அது கொடுப்பதென்ன? நீர் யாவற்றினும் மிக எதை வெறுக்கின்றீரோ அந்தச் சாவுக்கே உம்மைச்

செலுத்திவிடுகிறது. பல பிறவிகளிலும் இந்தத் தலைவனுக்கு உழைத்தீர்; அவ் வொவ்வொரு பிறவியிலும் சாவையே பரிசாக அளித்தது. இது உண்மைச் சேவகமாகுமா? உண்மையான பரிசு தரும் உண்மைச் சேவை செய்ய விழைவீராயின் உண்மை யாண்டவற்குத் தொண்டுகொள்ளும். அப்படிக் கொள்வீராயின் அழியாப் பெருவாழ்வு பெறுவீர்.

இத் தொண்டு நெறி உண் முகமானது; புறத்தேயாகாது. அழியா வாழ்வைப் பெறுவிக்கும் பெருநெறி புறத்தே கழிகின்ற உழைப்புக்களால் ஏற்படுவதில்லை; அஃது ஏற்படுவது உண்முக உழைப்பினாலேயாகும். வலுவெல்லாந்திரட்டி உண் முகப்படுத்தவேண்டும். இதைச் செய்யாதவழி இழிந்த விலங்குகளினும் நீர் மேம்பட்டவராதலில்லை. உண்மை வாழ்க்கை உமதகத்தேயன்றிப் புறத்தே நிகழுவதன்று. ஆனால் அதைக் கண்டுகொள்வதற்கோ நிரம்பவும் உழைக்கவேண்டும். இவ்வுடம்புச் சாமியை எத்தனையோ பிறவிகளில் கும்பிட்டு வந்திருக்கிறீராதலால் மெய்ம்மைக் கடவுளது வழிபாட்டைத் திடீரென்று தொடங்கிடமுடியாது. ஏனெனில் உள்ளத்தை ஒடுக்குவதினும் உலகனைத்தையும் வென்று ஒடுக்குவது மிக்க எளிதாகும். அதனாலேயே பல நாடுகளையும் ஒடுக்கிவிட்ட வீரர்வீரனாகிய அருச்சுனனும் தனதுள்ளத்தை அடக்கமுடியவில்லை யென்று குறையிரக்க வேண்டியதாயிற்று. அருச்சுனனோ மகாவீரன், அதில் ஐயமேயில்லை; ஆயினும் அவன் இந்தப் புலத்திலே ஒருபோதும் பாடுபட்டதில்லையாதலால் தனது வலியின்மையை யுணர்ந்து வருந்தினான். நாமும் அருச்சுனனைப் போன்றிருக்கிறோம். இந்தப் பிறவியிலேயே என்று மழியாப் பெருவாழ்வையுற்று இன்

பந் துய்ப்பதற்கு இந்த நெறியொன்றையே கடைப்பிடிக்க வேண்டும். "முத்தியை யடைவிக்கும் நெறி பிறிதொன்று மில்லை."

ஆகவே உம்மை யாவரினுமிக்க இன்பமும் பொருளுஞ் பலமும் படைத்தவராக்கக்கூடிய நெறியொன்று முன்னரே காணப்பெற்றிருக்கிறதென்று அறியலாகும். இனி வேண்டியதென்ன? திடசித்தமே. வழியை யறிந்தும் அவ்வழிச் செல்லத் திடசித்தமில்லாவழி அவ்வறிவு பயனற்றதாய் விடும். சுவைமிக்க பண்டமெல்லாம் சமைக்க அறிவீராயி னும் சமையலறைக்குள்ளே சென்று அவற்றிற் சில ஆக்கிக் கொள்ளாவிட்டால் உமதறிவு உமக்கு உதவுவதில்லையே. ஆதலால் உய்யுநெறி உம்மகத்தே உண்டு என்ற அறிவு மாத்திரம் உம்மை ஈடேற்றிடாது. அரும்பாடு பட்டு அங் குறுதல்வேண்டும். ஆதலாற் சமயநெறி யென்பது முற்றி லும் அனுபவ பூர்வமானதொன்றும். வாதம்புரிந்து சித் தாந்தம் நிறுவுதற்கும் சமய நெறிக்கும் உறவேயில்லை. அஃதெல்லாம் அந்நெறி வழியொழுக உமக்குச் சித்தந் திடமுறுமுன்னர் நேரிடலாம். உமதறிவு யாவரறிவினும் மிகச் சுருங்கியதா யிருந்தாலும், கடவுளையடையவேண்டித் தீவிரமான விருப்பங் கொள்வீராயின், எவ்வகைக் கல்வியு மின்றி நீர் உமதகத்தே ஆழ்ந்து அம்மலர்மிசை யிறைவனை யடைதல்கூடும். அந்த நிலையிலே பரமபண்டிதனும் உமதடி சார்ந்து அமருவான். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர் கல்வி மணமற்றவர்; எழுதப் படிக்கக்கூட அவ்வளவாய்த் தெரியாதவர். என்றாலும் பெரும் பண்டிதர்களும் அவர் பாற்போந்து தத்தம் ஐயங்களை நீக்கிக்கொள்வது வழக்கம். அவர் கடவுளையடைவதற்கு அதிதீவிரமாய் விழைந்து அவ் விறைவனை அடைந்தும்விட்டார். ஆதலாலே இவ்வளவு

வல்லமை படைத்தவராயினர். ஏட்டுப் படிப்பு அல்லது சோதனைத் தேர்வினால் மட்டும் ஒருவன் அறிவெய்தல் கூடும் என்ற கொள்கையை இராமகிருஷ்ண தேவரது வரலாறு உறுதியாக மறுக்கின்றது. அறிவு இத்தன்மைய தென்றது மிகவும் வெள்ளையான கருத்து. வாழ்நாளெல்லாம் வருந்திக் கற்றாலும் கடைசியில் நீர் அறிந்துகொண்டது ஏதுமேயிராது. சாக்கிரட்டீசு மிக்க அறிவாளி: ஏனென்றால் தானறிந்துகொண்டது ஒன்றுமில்லை யென்று அறிந்திருந்தார்.

அப்படிப்பட்ட ஒருவர் இறைவனைத் தாம் காணுவதல்லாமல் மற்றவரையும் பார்க்கும்படிசெய்ய வல்லுநராகின்றார். கடவுளைக்கண்டேன் என்று கழறவல்ல ஒருவருண்டா என்று விவேகானந்த சுவாமிகள் தமது இளம் பிராயத்தில் ஓவாது தேடிக்கொண்டிருந்தார்; இல்லையாயின் கடவுளின் உண்மையைத்தான் தெளிவது எங்ஙனம் என்பார். பேர்பெற்ற ஒரு சாதுவைப் பற்றியாவது ஆசிரியரைப் பற்றியாவது கேள்வியுற்றபோதெல்லாம் அன்னவர் மாட்டுச்சென்று கடவுள் உண்டா என்று கேட்பார். அப் பெரியவர் ஆமென்று கூறுதலும், "கடவுளை நீர் கண்டதுண்டா?" என்று வினவுவார். இல்லை யென்று விடை வரலும், அவ்விடம்விட்டு அகன்றிடுவார். கடவுளைக் கண்டேன் என்று கூறினவரெவரையும் எங்கும் காண முடியவில்லையாதலால், கடவுளென்பது ஒரு கற்பனைப் பொருளே யென்ற முடிவுக்கு வந்துவிட்டார். பின்னரொரு நாள் தட்சிணேசுவரத்திலே யிருந்த இந்த ஞானியார் மாட்டு, பள்ளி பயின்றறியாத இப்பேரறிவாளர் மாட்டுப் போந்தார். கடவுளைக் கண்டிருக்கிறீராவென்று அவரையுங் கேட்டார். இராமகிருஷ்ணர் ஆம் என்று உடன் பதிலளித்

தார். "நான் கடவுளைக் காணும்படிசெய்ய உம்மால் முடியுமா?" என, "முடியும்" என்று அடுத்த விடையும் பிறந்தது. கடைசியாக சுவாமிகளது உள்ளம் திருத்தியடைந்தது. அநுபவமடைவதே சமயமாகும் என்று சுவாமிகள் தமது நூல்களிலெல்லாம் திரும்பத் திரும்ப வற்புறுத்துவதற்கு இதுதான் காரணம். மெய்யாகவே சமயமென்பது முற்றிலும் உற்றறியற் பாலதேயாகும்.

நீர் கடவுளைக் கண்டே தீரவேண்டும். ஆனால் அதற்கு அரும்பாடு படவேண்டும். எத்தனையோ பிறவிகளிலே பொய்ம்மைக் கடவுளை வழிபட்டு வந்தமையா லேற்பட்டுள்ள பழைய பழக்கங்களை முதற்கண் வென்றுகொள்ள வேண்டும். உள்ளத்தையும் புலன்களையும் ஒடுக்க வேண்டும். இயேசு நாதரைப்போன்று இவ்வுடம்பையும் இப் புலன்களையும் சிலுவையிலேற்றிச் செற்றாலொழிய, மேலெழும்ப முடியாது ; இறந்துவிட்ட இவ்வுடம்பினின்றும் எழும்பிப் போவதற்கு இயலாது. அவ்வாறெழுவதற்கு விழைவீராயின் இந்நாறுடம்பைச் சிலுவையிற் கொன்று புன் புலன்களை வெல்ல வேண்டும். இதை ஒவ்வொருவரும் செய்து தீரவேண்டும். இவ்வருஞ் செய்கையாற்றுவதற்கு மற்றெவற்றினு மிக்கவோர் முறையினை இராமகிருஷ்ண தேவர் அருளியிருக்கிறார். அவரருளுவது உமது புலன்களை வெல்ல விரும்புவீராயின் கடவுளே யாவற்றுக்கும் மேம்பட்ட உயர்தனிச் செம்பொருள் என்று மதிக்க வேண்டும் என்பதே. உமக்கு அழகில் விருப்பமிருந்தால், கடவுளின் கண்ணுள்ள பேரழகைப் போன்றது வேறெங்குக் காணுவீர்? வாக்கு வன்மையில் உமக்கு விருப்பமுண்டென்றால், மறைகளெல்லாவற்றையுந் திருவாய் மலர்ந்தருளிய எம்பெருமானின் மிக்க வன்மை

பெற்றவரு முண்டோ? வல்லமையை விழைவீராயின், கடவுளின் மிக்க வல்லமை வாய்ந்த பொருளும் உண்டு கொல்? ஒவ்வொருவருக்கும் இவைகளி லொன்றிலேனும் விருப்பம் இருந்தே தீரும். இவை யெல்லாமும் இறைவன் மாட்டு எல்லையற்ற அளவுக்குக் காணலாகும். அழகிய பெண்ணொருத்தியை விரும்பி யிருப்பீராயின், அவளழகு நிலைப்பது கொஞ்ச காலத்துக்கேயாம்; கடவுளழகோ என்று முளதாவது. ஆகையால் என்று மழியாத பேரழகும், என்று முலவாப் பெருவாழ்வும், ஆற்றலனைத்தும், அறிவெல்லாமும் உமக்கு வேண்டுமாயின், இறைவன்பாற் செல்லவேண்டும். அச்செலவிற்கு ஒரு காசுந் தேவையில்லை; உரிமைச்சீட்டொன்றும் வாங்க வேண்டியதில்லை. இறைவன்பாற் போவதற்கு உமது கால்கள் வேண்டாம்; அவரைக் காண்டற்கு உமது கண்கள் வேண்டாம்; அவரைக் கேட்டற்கு உமது காதுகள் வேண்டாம்; அவர் உமதகத்தே வீற்றிருக்கின்றார். அவரை யடைவதற்கு இவை யனைத்தும் மேற்செல்லாவகை அடைத்துவிட வேண்டும். அவரைக் காண்பதற்குக் கண்களை மூடவேண்டும்; கேட்பதற்குச் செவிகளை யடைக்க வேண்டும்; அணுகுவதற்குப் புறமுயற்சிகளை ஒழிக்கவேண்டும்.

இந்தக் குறிப்பைப் பிடித்துக் கொண்டு உண்முகமாக உழைத்து இறைவனை யடைமின். அப்பொழுதுதான் உண்மையில் மனிதராவீர். இவ்வருஞ் செயலுக்கு மிக வுறுதியான சித்தம் வேண்டும். இறைவனே உமதுண்மைத் தாயுந் தந்தையுமாவார், அவரே உமது மெய்யன்பனுந் தோழனுமாவார் என்ற இம்மெய்யுறவினை ஒருகால் உணர்ந்து கொண்டு அவரை யணுகுவீராயின் அளவற்ற பரிசு பெறுவீர்; ஏனென்றால் உம்மைப் பேணிப் பாது

காக்கும் பொருட்டு அப்பெருமானே உமது ஊழியக்கார னாக வந்தருளுவார். ஆகையாலே கழிபேரின்பமும் கழி பேரறிவும் கடவுளொருவரே தந்தருள மாட்டுவாராத லின், உமக்குப் பயித்திய மில்லாவிட்டால், மற்றெல்லாமும் விட்டொழித்து அவரையே விரும்பி நாடுவீர்.

மதராஸ் லா ஜர்னல் பிரஸ், மயிலாப்பூர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

அவதார புருஷர்களான ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்வாமி விவேகாநந்தர் இவர்களின் அரிய உபதேசங்களையும், நாட்டின் முன்னேற்றத்திற்கான பல கட்டுரைகளையுங்கொண்டு வெளிவரும் ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வருட சந்தா உள்நாடு ரூ. 3-0-0 வெளி நாடு ரூ. 4-0-0

ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தின் பழைய தொகுதிகள் மிக சரஸமான விலைக்குத் தரப்படும். உடனே எழுதுங்கள்.

பக்தி புகட்டும் நூல்கள்

			ரூ	அ	பை
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் 1003 உபதேச மொழிகள் சாதா பைண்டு		...	1	6	0
,, காலிகோ பைண்டு		...	1	12	0
எனது போர்முறை		...	0	3	0
சிகாகோ பிரசங்கம்		...	0	5	0
விஜயம் சந்தாதாருக்கு	... 0 4 0				
பக்தியோகம்		...	0	10	0
விஜயம் சந்தாதாருக்கு	... 0 8 0				
கர்மயோகம்		...	0	12	0
விஜயம் சந்தாதாருக்கு	... 0 10 0				
விவேகாநந்தர் கடிதங்கள் முதற்பாகம்		...	0	8	0
ஜகஜீவபர விளக்க வினாவிடை		...	0	12	0
வேதாந்தத்தின் கோட்பாடுகளும் கருத்துக்களும்		...	0	3	0
விஜயம் சந்தாதாருக்கு	... 0 2 0				
தனக்குத்தானே உதவியும் ஆத்மார்ப்பணமும்		...	0	1	6
விஜயம் சந்தாதாருக்கு	... 0 1 0				
விவேகாநந்த சுவாமிகள் தற்கால இந்தியாவுக்குக் கொண்டுவந்த செய்தி		...	0	4	0
பக்தி மார்க்கம்		...	0	7	0
விஜயம் சந்தாதாருக்கு	... 0 6 0				
நடராஜ வடிவம்; தில்லைத் திருநடனம்		...	0	2	0
விதிவசம் அல்லது ஊழ்வினை		...	0	0	6